தலைப்பு 210 – அரசாங்க தகவல் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 210 – அரசாங்க தகவல் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஜுலை 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தை தவிர, அரசாங்க தகவல் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளினால், நிதி நிலைமை, நிதி செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையிற்கு இணங்கியதாக அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் உண்மையாகவும் நியாயமானதுமான நிலைமையினை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அரசாங்க தகவல் திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ள

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.

ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரந்துரைகள்
(i)	கடந்த ஆண்டு நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் நடைமுறை வேலையாக ரூபா 4,832,668 காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப மீதியாக முன்கொண்டு கொண்டு வரும் போது ரூபா 3,000,000 ஆக காட்டியிருந்ததில் ரூபா 1,832,668 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	2023 நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் கீழ் நடைமுறை வேலைகளாக காட்டியிருந்த ரூபா 4,832,668 தொகையில் 2024 ஆண்டினுள் ஆண் மலசலகூடத் தொகுதி நிறைவடைந்த காரணத்தால் ரூபா 1,832,668 தொகை மூலதனம் ஆக்கப்பட்டதாகவும் ரூபா 1,832,668 கட்டிடங்களின் பெறுமதியுடன் சேர்ந்துள்ளதாகவும் நடைமுறை வேலைகளின் தற்போதையா மீதி ரூபா 3,000,000 ஆகும்.	கடந்த ஆண்டு இறுதி மீதி நடைமுறை ஆண்டின் ஆரம்ப மீதியாக முன்எடுத்து சரியாக சீராக்கம் செய்ய வேண்டும்.
(ii)	அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு சொந்தமான இருந்த ரூபா 4,000,000 பெறுமதியுடைய GB -4052 மற்றும் GB-4219 ஆகிய இரண்டு மோடார் வண்டிகள் 2024 ஜுலை 31 திகதிய இலக்கம் POST/OP/CO/IMT/965/2024 கொண்ட தபால் மா அதிபரின் கடிதம் மூலம் சட்டரீதியாக	2025 ஆண்டினுள் இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்து அந்த இரண்டு வாகனங்களையும் சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுப்பதென.	குறித்த பற்றாக்குரை தொடர்பாக செயற்பட வேண்டிய முறையை விரைவில் முடிவு செய்து குறித்த வாகனங்களின் பெறுமதியை கணக்குகளிலிருந்து

தபால் திணைக்களத்திற்கு சுவீகரித்ததாக குறிப்பிட்டிருந்ததுடன் மோடார் வாகன பதிவு சான்றிதழ் பிரகாரமும் உரிமை தபால் திணைக்களத்திற்க ஒப்படைத்துள்ளதாக உறுதியான போதும் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் இந்த வாகனங்களிக் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தது. சட்ட ரீதியான உரிமை திணைக்களத்திற்கு இல்லாத இரண்டு வாகனங்கள் திணைக்களத்தின் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் காண்பித்த காரணத்தால் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமானம் அந்த பெறுமதியால் உயர்வடைற்திருந்தது.		அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அரசாங்க தகவல் திணைக்களத்தினால் பின்வரும் சில பதிவேடுகளை பேணியிருக்காததுடன், சில பதிவேடுகளை முறையாக மற்றும் நாளாதுவரையாக பேணி இருக்கவில்லையென மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரந்துரைகள்
(i) பிணை பதிவேடு		
நிதிப் பிரமாணம் 891(1) பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணை பதிவேடொன்றை தயாரித்திருக்கவில்லை.	குறித்த உத்தியோகத்தர்கள் இடமிருந்து பிணை அறவிட்ட பின்னர் நாளாதுவரை ஆக்குவதென.	நிதிப் பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்படும் தகவல்கள் உள்ளடங்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் பற்றி பிணை பதிவேடொன்றை பேணிக் கொள்ள வேண்டும்.
(ii) சேதம் பற்றிய பதிவேடு		
நிதிப் பிரமாணம் 110 பிரகாரம் சேதம் பற்றிய பதிவேட்டை நாளாதுவரையாக்கி இருக்கவில்லை.	நாளாதுவரையாக்க குறித்துக் கொண்டதென	நிதிப் பிரமாணம் 110 இன் ஏற்பாடுகள் பிரகாரம் அதன் கீழான படிபத்தின் பிரகாரம் சேதம் பற்றிய பதிவேடொன்றை பேணிக் கொள்ள வேண்டும்.

(iii) பொறுப்புக்கள் பற்றிய பதிவேடு

நிதிப் பிரமாணம் 214 பிரகாரம் பொறுப்புக்கள் பற்றிய பதிவேட்டை நாளாதுவரையாக்கி இருக்கவில்லை.	நாளாதுவரையாக்க குறித்துக் கொண்டதென.	நிதிப் பிரமாணம் 214 பிரகாரம் பொறுப்புக்களை தினந்தோறும் பரீட்சிக்கக் கூடியவாறு பொறுப்புக்கள் பதிவேட்டில் அந்த பொறுக்களை பதிய வேண்டும்.

(iv) வாகனம் பட்டியற்படுத்தும் பதிவேடு

நிதிப் பிரமாணம் 1647(உ) பிரகாரம் வாகனம் பட்டியற்படுத்தும் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.	2025 ஆண்டு முதல் ஆரம்பித்து பேணிச் செல்வதென.	நிதிப் பிரமாணம் 1647(உ) பிரகாரம் வாகனம் பட்டியற்படுத்தும் பதிவேடு பேணப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் குறிப்பிடுகிறேன்.

(i) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பின்வரும் கணக்காய்வு அவதானிப்பு பிரகாரம் கடந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக இருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	இவ்வறிக்கையின் பந்தித் தொடர்பு
நிதியல்லாத சொத்துக்களிற்குரிய 2023 ஆண்டின் இறுதி மீதி மற்றும் 2024 ஆண்டின் ஆரம்ப மீதி இணங்கவில்லை.	1.6(அ)

3. நிதிமீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரந்துரைகள்
(அ)	திணைக்களத்திற்காக ரூபா 183,300,000 தொகை மூலதன செலவிற்காக தேறிய நிதி ஏற்பாடு காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 52,531,163 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மூலதனச் செலவில் 71 சதவீதம் எஞ்சியிருந்தது.	சிவில் வேலைகள் தொழல்நுட்ப அறிவுடன் கூடிய உத்தியோகத்தர் ஒருவர் இல்லாதமை, காணப்படும் பொருட்களை திருத்தி பயன்படுத்துதல், அனைத்து தேவைகளையும் மீளாய்வு செய்து ஒரே முறையில் பெறுகை செய்வதன் மூலம் கிரயத்தை குறைத்துக் கொள்ளல் மற்றும் பயிற்சி	முடியுமான வரை சரியாக மதிப்பீடுகளை பொறுத்தமானவாறு தயாரிக்க வேண்டும்.

		நிகழ்ச்சித் திட்டங்களிற்காக வளவாளர்களின் பங்குபற்றலை பெற்றுக் கொள்ள முடியாமை போன்ற காரணங்களினால் இந்த நிதிஏற்பாடு எஞ்சியுள்ளதென.	
(ஆ)	நிதிப்பிரமாணம் 50 பிரகாரம், தமது திணைக்களத்திற்குரிய வரைவு மதிப்பீடு, நிதிப்பிரமாணங்களிற்கு இணங்க தயாரிப்பதனை பொறுப்பேற்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மீளாய்வாண்டிற்காக நிதிஏற்பாடு வழங்கியிருந்த மொத்த மீண்டுடெழும் 22 செலவு விடயங்களில் 08 செலவு விடயங்களிற்கு வழங்கியிருந்த ரூபா 26,534,060 நிதி ஏற்பாட்டினை வேறு 05 மீண்டெழும்டெ செலவு விடயங்களிற்கு மற்றும் ஒரு மூலதன செலவிடயத்திற்கு பரிமாற்றியிருந்ததால் நிதிப்பிரமாணங்களின் தேவைப்பாட்டை நிறைவு செய்யும் வகையில் செயற்பட்டு நடைமுறை சாத்தியமான மதிப்பீட்டை தயாரித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	மாதாந்த வாழ்கை செலவுப் படி அதிகரிக்கப்பட்மை, எதிர்பாராதவாறு வெளிநாடுகளில் இடம்பெற்ற சர்வதேச மாநாடுகளின் ஊடக மேவுகைக்காக உத்தியோகத்தர்களை பங்குபற்ற செய்தமை, பாதுகாப்பு சேவை மற்றும் சுத்திகரிப்பு சேவைக்காக வருடாந்த பாதீட்டினால் ஒதுக்கிய நிதிஏற்பாடு போதமை, வாகனங்கள் 10 ஆண்டுகளை விட பழையதாகையால் அவற்றின் பராமரிப்பு செலவுகள் அதிகரித்தமை மற்றும் மென்பொருள் பராமரிப்பிற்காக பாதீட்டினால் ஒதுக்கிய நிதிஏற்பாடு போதமை காரணமாக ஏனைய செலவு விடயங்களிலிருந்து நிதிஏற்பாடு பரிமாற்றப்பட்டுள்ளதென.	மதிப்பீடுகளை முடியுமான வரை சரியாக தயாரிக்க வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் செய்யப்படாத பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ரூபா 9,484,680 ஆனதுடன் பொறுப்புக்கள் பதிவேட்டில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 10,510,212 ஆனதில் ரூபா 1,025,532 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	CIGAS முறைமையிற்கு கடப்பாடுகளை உட்படுத்த முடியாததால் அந்த கடப்பாடு அனைத்தையும் பொறுப்பாக காண்பித்துள்ளதென. சில செலவு விடயங்களின் நிதிஏற்பாடு போதாமையால் அந்த செலவு விடயங்களிற்குரிய பொறுப்புக்கள், பொறுப்புக்கள் பதிவேட்டில் உட்படுத்தி இருந்ததாக மற்றும் CIGAS முறைமையிற்கு உட்படுத்த முடியாததால் ரூபா 1,025,532 ஆன பொறுப்பு பெறுமதி நிதிக்கூற்றுக்களிற்கு	பொறுப்புக்கள் பதிவேட்டை நாளாது வரையாக பேணிக் கொள்ள வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் பொறுப்புக்களை சரியாக பதிய வேண்டும்.
(ஆ)	நி.பி. 94 (i) பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு காணப்பட்டால் அன்றி எந்தவொறு திணைக்களத்தினாலும்		நிதிஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களிற்கு உட்படக் கூடாது.

வேலையொன்றை அல்லது சேவையொன்றை அல்லது வழங்கலொன்றிற்காக எந்தபொரு செலவிற்கும் அல்லது கடப்பாடொன்றிற்கு ஏனும் கடப்பட்டிருக்கக் கூடாது. அவ்வாறே அதற்காக மேற்கொள்ளப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் செலவின அளவுகள் எந்த விதத்திலும் நிதியாண்டின் நிதிஏற்பாட்டை விஞ்சக் கூடாத போதும் 2024 ஆண்டில் இரண்டு மீண்டெழும் செலவு விடயங்களிற்காக ரூபா 1,041,633 நிதிஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களிற்கு உட்பட்டிருந்தது.	உட்படுத்த முடியவில்லையென.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

	அவதானிப்பு			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரந்துரைகள்
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	**பெறுமதி ரூபா**	**இணங்காமைகள்**		
(i)	**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை**				
	நி.பி. 104	-	திணைக்களத்திற்குரிய 02 வாகனங்கள் 2024 ஆண்டில் விபத்திற்குள்ளாகி இருந்ததுடன் இந்த விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் பொறுப்புதாரர்களை குறித்துரைக்க விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	வாகனங்கள் தொடர்பா நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால் 2024 ஆண்டு முடிவடைய முன்னர் உள்ளக விசாரணையை நிறைவு செய்ய முடியவில்லையென	நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	நி.பி. 802	- வாகனங்கள் விளைவற்று காணப்படுவதில்லை என நிறுவனத் தலைவரினால் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் திணைக்களத்திற்குரிய வாகனமொன்று 2023 ஆண்டு முதல் கணக்காய்வு திகதி வரை விளைவற்று காணப்பட்டது.	GB-4070 கொண்ட வாகனத்தை திருத்த வேண்டுமெனவும் நிதிஏற்பாடு போதாததால் திருத்தம் செய்யப்படவில்லையென.	வாகனத்தை திருத்தி பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும்.
(ii)	2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 12.1 பந்தி	- வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை மும் மொழிகளிலும் தயாரித்து நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் செல்ல முன்னர் சபையில் சமர்ப்பிப்பதற்காக உரிய ஏற்பாடுகளின் கீழ் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும், திணைக்களத்தின் 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை 2023 ஜுலை 26 திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருந்ததுடன் 2022 ஆண்டிற்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை 2025 மார்ச் 31 திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.	2022 ஆண்டிற்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2025 மே மாதம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.	சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை உரியவாறு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரந்துரைகள்
(அ)	செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் எவ்வித பௌதீக முன்னேற்றமும் இல்லாத 12 நிகழ்ச்த் திட்டங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 41.33 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த 08 நிகழ்ச்சித் திட்டங்கள் காணப்பட்ட போதும் அந்த நிதிஏற்பாடு ஆண்டினுள் குறித்த	ஊடக உருவகங்களின் கீழ் சில நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தவில்லை எனவும், இன்னும் சிலவற்றை தற்காலிகமாக நிருத்தியதாகவும் ஏனைய சில செயற்பாடுகளை செயற்படுத்த முடியவில்லை எனவும்	ஆண்டினுள் திட்டமிடப்பட் நடவடிககைகளிற்காக நிதிஏற்பாட்டை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	நிகழ்ச்சித் திட்டங்களிற்காக ஈடுபத்தி இருக்கவில்லை.	அறிவிக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	மீளாய்வாண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை முன்னேற்றத்தை கவனிக்கும் போது 50 சதவீதத்திலும் குறைந்த முன்னேற்றத்தை காண்பிக்கும் 05 நிகழ்ச்சி திட்டங்கள் காணப்பட்டன.	செயற்பாடுகள் 05 மாத்திரம் உள்ளதென.	திட்டமிட்டவாறு செயலாற்றுகைளை அடைந்து கொள்ள வேண்டும்.

4.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரந்துரை
நிறுவனத்தின் உள்ளக தொடர்பாடல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அத்தியவசியமான PABX முறைமையை நிறுவும் செயற்பாடுகள் 2023 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டு இறுதி வரை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.	ஆரம்ப கட்ட செற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதால் இந்த செயற்திட்டத்தின் முன்னேற்றம் 30 சதவீதமாக குறிப்பிடப்பட்டுள்ளதென.	திட்டமிட்ட பணிகளை உரிய காலத்தினுள் மேற்கொள்ள வேண்டும்.

4.3 எதிர்பார்த்த நலன்களை (Outcome) அடைந்து கொள்ளாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரந்துரை
2024 ஆண்டினுள் கொள்வனவு செய்த ரூபா 5,103,500 பெறுமதியான 04 மடிக் கணனிகள் மற்றும் 11 டெஸ்க்டொப் கணனிகள் 2024 திசெம்பர் 31 திகதி தனியார் கம்பனியொன்றிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த கணனிகள் எதிர்பார்த்த அளவுத் திட்டத்திற்கு இணங்காததால் 2025 மார்ச் 31 திகதி வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கணனிகளை பொறுப்பேற்கும் போது குறைபாடுகள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன் 2025 ஏப்ரல் 03 திகதி அந்த குறைபாடுகளை செய்துதந்த பின்னர் மாவட்ட அலுவலகங்களிற்கு அந்த கணனிகளை பகிர்தளிக்க நடவடிக்கை எடுத்துவருவதென.	உரிய அளவுத் திட்டத்திற்கு இணங்க பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தாமதமின்றி குறித்த சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரந்துரைகள்
(அ)	அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 பரிவின் பிரகாரம் குறைந்த பட்சம் 03 வருட காலத்திற்கு எதிர்பார்க்கும் முக்கிய பெறுகைகள் நடவடிக்கைகளை பட்டியற்படுத்தி பிரதான பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க வேண்டியதுடன் ஆண்டிற்கான பெறுகைகள் நடவடிக்கைகளை விரிவாக தயாரிக்க வேண்டும். திணைக்களம் தயாரித்துள்ள பெறுகைகள் திட்டம் 2024 ஆண்டிற்காக மாத்திரம் தாரித்ததாகும்.	2024 ஆண்டிற்காக மாத்திரம் பெறுகைகள் திட்டம் தாரிக்கப்பட்டுள்ளதென.	அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைகள் திட்டம் தாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்காக 15 மடிக் கணனிகளை மாத்திரம் பெற்றக் கொள்ளும் தேவைப்பாட்டை குறிப்பிட்டு பெறுகைகள் திட்டத்தை தயாரித்திருந்த போதும் பின்னர் திணைக்கள தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலக தேவைப்பாடாக குறிப்பிட்டு ரூபா 9,877,779 பெறுமதியான 17 மடிக் கணனிகளை மற்றும் 12 டெஸ்க்டொப் கணனிகளை கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.	திருத்த முடியாத நிலையில் இருந்த கணனிகற்க புதிய Laptop கணனிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்ததாகவும் 5 ஆண்டுகள் உள்நாட்டு /வெளிநாட்டு விடுமுறை பெற்று மீண்டும் அந்த விடுமுறை காலத்தை முன்னர் நிறைவு செய்து கடமையிற்கு அறிக்கையிட்ட சில உத்தியோகத்தர்கள் இருப்பதால் குறித்த கணனி தேவைப்பாடு அதிகரிக்க காரணமாக அமைந்ததென.	தேவைப்பாட்டை சரியாக இனங்காண வேண்டியதுடன் பெறுகைகள் திட்டத்திற்கு இணங்க பெறுகைகளை மேற்கொள்ள வேண்டும்.
(இ)	இலக்கம் 01/2024 மற்றும் 2024 சனவரி 10 திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் அவசர கொள்வனவு ஏற்படாதவாறு தேவைப்பாட்டை முன்னரே இனங்காணுதல் மற்றும் அங்கீகார பெறுகைகள் திட்ட பிரகாரம் பெறுகைகள் நடவடிக்கை தாமதங்கள் குறையும் வகையில் செயற்படுத்த வேண்டிய போதும் கணனி கொள்வனவு தேவைப்பாடு தொடர்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளது 2024 நவம்பர் மாதம் 26 திகதி ஆவதுடன் நிறுவன தேவைப்பாட்டை முன்னரே	2024 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்ட திருத்தத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதானது 2024 திசெம்பர் 30 திகதி ஆகையால் பெறுகைகள் திட்டத்தை திருத்த போதிய காலம் இருக்கவில்லையென.	தேவைப்பாட்டை சரியாக இனங்காண வேண்டியதுடன் பெறுகைகள் திட்டத்திற்கு இணங்க பெறுகைகளை மேற்கொள்ள வேண்டும்.

	இனங்கண்டு பெறுகைகள் திட்டத்திற்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2024 ஆண்டில் குறித்த திருத்தத்தை உட்படுத்தி திருத்திய பெறுகைகள் திட்டத்தை தயாரிக்கவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(ஈ)	நிறுவனத்தின் நூலக முகாமைத்துவ முறைமை, மனிதவள முகாமைத்துவ தகவல் முறைமை, வேலை போக்கு மற்றும் அஞ்சல் முகாமைத்துவ முறைமையை (Work Flow and Postal management System) நிறுவுவதற்காக ரூபா 1,633,781 செலவிட்டிருந்ததுடன் இல்ஙகை டெலிகொம் நிறுவனத்தின் மூலம் மேற்குறித்த பணியை மேற்கொண்டிருந்தது. இல்ஙகை டெலிகொம் நிறுவனத்துட்ன இதுவரை ஒழுங்கான உடன்படிக்கைக்கு உட்பட்டிருக்காததுட்ன குறித்த பணிகளை சிறப்பாக மேற்கொண்டதாக எந்தவிட உறுதிப்படுத்தலும் இன்றி மொத்த பட்டியல் பெறுமதியான ரூபா 1,633,781 தொகைக்காக 02 காசோலைகளை 2024 திசெம்பர் 30 திகதியுடன் எழுதி பணிப்பாளர் (கட்டுப்பாடு) பொறுப்பில் 2025 ஏப்ரல் 10 திகதி வரை தடுத்து வைக்கப்பட்டிருந்து. நிறுவனத்தின் தன்மைக்கு பொருந்தும் வகையில் குறித்த முறைமைகளின் தேவைப்பாட்டை குறிப்பாக இனங்கண்டிருக்கவில்லை. இது தொடர்பாக 2024 ஒக்டோபர் 07 திகதிய அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் தொழில்நுட்ப குழுவொன்று நியமிக்கப்பட்டு இருந்த போதும் அக்குழு தகைமை மற்றும் அனுபவமிக்க உத்தியோகத்தர்களை கொண்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.	மனிதவள முகாமைத்துவ முறைமை, Work flow and Postal Management System மற்றும் நூலக முகாமைத்துவ முறைமை அபிவிருத்தியின் போது, நேர ஒப்பந்த முறையின் கீழ் தொகுப்பு செய்யும் போது பெறுகைகள் குழுவின் அதிகார எல்லைகள் பெறுகைகள் ஒழுங்கு விதிக்கோவை திருத்தமாக 2024 ஜுன் 25 திகதி வெளியிடப்பட்டுள்ளதுடன் Supplement 40 இல் குறிப்பிடப்பட்டுள்ளதால் அதன் பிரகாரம் திணைக்கள பெறுகைகள் குழுவினால் இந்த செயற்திட்டத்திற்காக அங்கீகாரம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதென. திணைக்கள தேவைப்பாட்டின் பிரகாரம் இந்த முறைமைகளை அமைத்ததன் பின்னர் ஒழுங்கான சேவை உடன்டிக்கையிற்கு இணந்த பின்னர் மாத்திரமே பணம் கொடுப்பனவு செய்யும் வகையில் அது வரை குறித்த காசோலைகள் கட்டுப்பாட்டு பணிப்பாளரின் கீழ் தடுத்து வைத்துள்ளதென.	திணைக்கள தேவைப்பாட்டிற்கு பொருந்தும் வகையில் பெறுகைகளை மேற்கொள்ள வேண்டியதுடன், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமிக்கும் போது தகைமை மற்றும் அனுபவமிக்க உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறித்த பணி எதிர்பார்த்தவாறு நிறைவேற்றப்பட்டுள்ளதாக உறுதி செய்து கொண்ட பின்னர் கொடுப்பனவு செய்ய வேண்டும்.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரந்துரைகள்
(அ)	அரசாங்க தகவல் திணைக்களம் அமைந்துள்ள 2 ஏக்கர் 2 ரூட் 9.25 பேசரஸ் நிலத்தின் பெறுமதி ரூபா 1,227,750,000 ஆக மதிப்பிட்டு 2024 திசெம்பர் 31 திகதிக்கு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியுள்ள போதும் அதன் உரிமையை திணைக்களத்திற்கு சுவீகரிக்க தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. காணி பெறுமதி மொத்த சொத்துக்களின் 63 சதவீதத்தை பிரநிதிப்படுத்துகிறது.	முன்நடவடிக்கை எடுக்க குறித்துக் கொண்டதென.	காணியின் உரிமையை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	1999 ஆண்டில் பிரான்ஸ் கடன் உதவியின் கீழ் கொள்வனவு செய்து தொழில்நுட்ப முறைமைகள் காலாவதியான காரணத்தால் பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்ட எதிர்பாக பொருளாதார நலன்கள் அற்ற Debri வர்ண இரசாயனகூட இயந்திரம் ரூபா 12,000,000 பெறுமதிக்கு நிதிக்கூற்றுக்களில் காண்பித்துள்ளதுடன் எஞ்சிய பெறுமதியை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்ற இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பிரான்ஸ் கடன் உதவியின் கீழ் கொள்வனவு செய்துள்ள Debri வர்ண கலவை இயந்திரம் அதன் போது நிலவிய அன்னிய செலாவணி விகிதத்தின் பிரகாரம் ரூபா 160 மில்லியனளவு பெறுமதி எனவும், அதன் கிரயத்தை மதிப்பிட்டு கணக்கீடு செய்திருந்தது ரூபா 12 மில்லியனிற்கு எனவும், அந்த பெறுமதி இயந்திர பெறுமதியின் 7.5 சதவீத அளவான சிறிய பெறுமதி எனவும், இந்த இயந்திரத்திற்கான கடன் தொகை செலுத்தி முடிவடையவுள்ளது 2042 ஆண்டளவில் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	எஞ்சிய பெறுமதியை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.6 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரந்துரை
நிதிப்பிரமாணம் 880 பிரகாரம் அரச உத்தியோகத்தர் பிணை கட்டளை சட்டத்தின் 612 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய போதும் திணைக்களத்தின் பிணை வைக்க வேண்டிய நான்கு உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை.	நிதிப்பிரமாணம் உரிய கட்டளை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.	2025 ஜுன் மாதம் முதல் பிணைக்காக அறவிட நடவடிக்கை எடுத்து வருவதென.

4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரந்துரைகள்
(அ)	வடக்கு புகையிரதப் பாதை நவீனமயமாக்கல் தொடர்பான அறிக்கை நிகழ்ச்சித் திட்டமொன்றை ரூபா 239,481 செலவில் தயாரித்திருந்த போதும் இதுவரை எந்தவொரு ஊடகத்திலும் ஒளிபரப்பப்பட்டு இருக்கவில்லை. குறித்த நிகழ்ச்சித் திட்டத்தை 05 நிமிடங்களிற்கு தயாரிக்க திட்டமிட்டிருந்த போதும் 30 நிமிடங்களிற்கு தயாரிக்கப்பட்டு இருந்தது.	அறிக்கை நிகழ்ச்சித் திட்டத்தை இதுவரை விளம்பரப்படுத்த முடியாதுள்ளதாகவும், இந்த அறிக்கை நிகழ்ச்சித் திட்டத்தின் ஒளிபரப்புக் காலம் 15 நிமிடங்களை விஞ்சியுள்ளதெனவும், இங்கு ஒளிபரப்பு காலம் அதிகரித்த போதும் முதலாம் கட்டத்திற்காக மதிப்பிட்ட தொகையை விஞ்சி மேலதிகமாக எச் செலவையும் செய்யவில்லையென.	எதர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் செயற்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை அரசின் மற்றும் உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழுவுடன் பிரான்ஸ் பெரிஸ நகரில் 2024 ஜுன் மாதம் 26 முதல் 29 வரையான காலத்தினுள் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் ஊடக மேவுகை செயற்பாடுகளிற்காக வெளிநாடு செல்ல உரிய தினத்தில் வீசா பெற்றுக் கொள்ளாத காரணத்தால் விமானப்பயண அனுமதிச் சீட்டு திகதிகளை பிற்போட நேர்ந்ததால் அதற்காக ரூபா 169,200 தொகை தண்டப்பணம் செலுத்த வேண்டியிருந்ததுடன் ஊடகக்குழு பிரானஸ் நாட்டிற்கு செல்லும் போது குறித்த உடன்படிக்கை கையொப்பமிட்டு நிறைவடைந்தாக அவதானிக்கப்பட்டதால் இதற்காக செலவிட்ட ரூபா 1,804,421 தொகை விளைவற்ற செலவொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	இப் பணிக்காக வீசா தாமதித்ததன் மீது ஜுன் 26 திகதிக்கு குறித்த பணிக்காக அந்த நாட்டில் தொடர்புபட முடியாது போன போதும், 2024 ஜுன் 26 திகதி இரவில் இந்த உத்தியோகத்தர்கள் வெளியேறிச் சென்று 2024 ஜுன் 27 முற்பகல் பிரான்ஸின் பெரிஸ் நகரிற்கு சென்று அத்திகதி முதல் கடமை மேற்கொண்டுள்ளனர்.	எதர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் செயற்பட வேண்டும்.

4.8 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரந்துரைகள்
(அ)	2024 ஆண்டில் இருவார சஞ்சிகை அச்சு மற்றும் தலைப்பு கிரயம் ரூபா 3,299,994 ஆனதுடன் விற்பனை வருமானம் ரூபா 772,339 ஆனது. அதன் பிரகாரம் ரூபா 2,527,655 ஆன நட்டம் கிடைத்திருந்தது. நட்டம் குறையும் வகையில் கிரயத்தை மேவுகை செய்து கொள்ள இயலுமான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அச்சீட்டை பாகம் வாரியாக கணக்கு வருமானத்தை வெவ்வேறாக இனங்காண வேலைத் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை.	இது ஆரம்ப காலத்தில் ஆகையால் தேசிய பணிப்பொறுப்கை மேற்கொள்வதற்காகவே அன்றி விற்பனையின் மீது அடிப்படையாக்க கொண்ட பணியொன்றல்ல எனவும், பதவிநிலை உத்தியோகத்தர் கூட்ட தீர்மானத்தின் பிரகாரம் அதன் பிரதிகளின் எண்ணிக்கை 2024 ஆண்டு மே மாதம் முதல் 500 வரை குறைத்துள்ளதாகவும், இருவார சஞ்சிகையை ஒரு மாதத்திற்கு ஒரு பாகத்திற்கு மட்டுப்படுத்த நேர்ந்தாகவும் அறிவிக்கப்பட்டது.	விற்பனை வருமானத்தை சரியாக இனங்காண செயன்முறை ஒன்றை தயாரிக்க வேண்டியதுடன் கிரயத்தை குறைத்துக் கொள்ளவும் குறைநப்பட்டம் கிரயத்தை மேவுகை செய்து கொள்ள இயலுமான வேைலத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும்.
(ஆ)	அரசாங்க தகவல் திணைக்களத்தின் புதிய கேட்போர் கூடத்திற்கு மின்பிரப்பாக்கி இயந்திரமொன்றை வாடகை அடிப்படையின் மீது பெற்றுக் கொள்ளல் 2022 ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அதற்காக 2024 ஆண்டிற்காக மாத்திரம் ரூபா 1,206,703 ஆன வாடகை செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த அரசாங்க கொள்கை திட்டம் மற்றும் அபிவிருத்தி செயன்முறை தொடர்பாக அறிவுருத்தலை தொடர்ந்து மேற்கொள்வதற்காக நிறுவனத்தினுள் மின்பிரப்பாக்கி இயந்திரமொன்று காணப்படுவது அத்தியசியமென	2024 ஆண்டினுள் புதிய இயந்திரமொன்றை கொள்வனவு செய்ய இயலாதுள்ளதென.	தேவைப்பாட்டிற்கு இணங்கியதாக அத்தியவசிய பெறுகைகளை திட்டமிட்டு கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	அவதானிக்கப்பட்டது. 2024 ஆண்டில் இயந்திரம் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்ய ரூபா 100,300,000 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கியிருந்த போதும் 2024 இல் மின்பிரப்பாக்கி இயந்திர தேவைப்பாட்டை பெறுகைகள் திட்டத்திற்கு உட்படுத்தி இருக்கவில்லை.		
(இ)	தனியார் கம்பனி ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்த 15 கணனிகற்காக கொடுப்பனவு செய்ய இலக்கம் 312329 மற்றும் 2024 திசெம்பர் 29 திகதிய காசோலையை வரைந்து 2025 மார்ச் 31 திகதி வரை குறித்த தரப்பினரிற்கு வழங்காது கணக்கு பிரிவினுள் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 திகதி திணைக்கள களஞ்சியத்திற்கு குறித்த கணனிகள் கிடைத்துள்ளதாக பெறுகை கோவைகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டதுடன் குறித்த கணனிகள் களஞ்சியத்தற்கு கிடைக்க முன்னர் குறித்த காசோலை வரைந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. குறித்த கணனிகளில் குறைபாடு காணப்படுவதாக பிரிவத் தலைவர், டிஜிடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அலகினால் 2024 திசெம்பர் 31 திகதி தகவல் திணைக்களத்தின் பிரதான கணக்காளரிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ள போதும் அது பற்றி கொள்வனவு செய்த கம்பனியின் விற்பனை முகாமையாளரிற்கு எழுத்துமூலம் அறிவித்திருந்தது 2025 மார்ச் 20 திகதி ஆகும்.	2024 ஆண்டில் கணக்கள் தீர்க்க வேண்டியதால் 2024 திசெம்பர் 29 திகதி காசோலையை வரைந்து அந்த செலவினத்திற்கு உரிய தொகையை ஒதுக்கிக் கொண்டதாக, கணனிகளில் சிறிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டால் காசோலையை பின்னர் வழங்க நடவடிக்கை எடுத்ததாக, குறைபாடு தொடர்பாக குறித்த நிறுவன உத்தியோகத்தர்களிற்கு வாய்மூலம் பல தடவைகள் அறிவித்தாக, அது விரைவில் இடம்பெறாதால் 2025 மார்ச் 20 திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதாக, அளவுத் திட்டத்தின் பிரகாரம் 2025 ஏப்ரல் 04 திகதி கணனி உபகரணங்கள் கிடைத்துள்ளதுடன், காசோலையை அந்த நிறுவனத்திற்கு விடுவித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	உரிய அளவுத் திட்டத்தின் பிரகாரம் குறித்த பொருடகள் கிடைத்துள்ளதாக உறுதி செய்து கொண்ட பின்னர கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல்.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரந்துரை
2017 இன் 19 இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பயன்படுத்தும் கட்டளை பிரகாரம் நிறுவனத்தின் நிலைபேறான நோக்கங்களை இனங்காணும் போது 06 நோக்கங்களை இனங்கண்டிருந்த போதும் இலக்குகளை நிறைவு செய்யும் சவாலாக போதிய நிதிஏற்பாடு கிடைக்காமை மற்றும் காலத்திற்கு காலம் அரசினால் பலவேறு சுற்றறிக்கை மூலம் நிதிஏற்பாட்டு மட்டுப்படுத்தல் குறிப்பிட்டுள்ள போதும் கிடைக்கும் நிதிஏற்பாட்டை வினைத்திறனாக ஆக்கபூர்வமாக பயன்படுத்தி நிறுவனத்தின் விடயப் பரப்பிற்கு மற்றும் நிதிரீதியான இயலுமைக்கு பொருந்தும் வகையில் நிலைபேறான நோக்கங்களை அமைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	2025 ஆண்டுடிலிருந்து எதிர்காலத்திற்கு நிலைபேறான அபிவிருத்த நோக்கங்களை இனங்காணும் போது அந்த விடயங்கள் தொடர்பில் மேலும் கவனம் செலுத்தியுள்ளதென.	நிறுவனத்தின் விடயப் பரப்பிற்கு மற்றும் நிதிரீதியான இயலுமைக்கு பொருந்தும் வகையில் நிலைபேறான நோக்கங்களை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. நல்லாளுகை

6.1 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரந்துரை
2024 ஆண்டின் உள்ளக கணக்காய்வு திட்டம் பிரகாரம் 12 துறைக்களிற்குரியதாக உள்ளக கணக்காய்வு செய்ய திட்டமிட்டிருந்த போதும் அவற்றில் 07 துறைகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வு மேற்கொள்ப்பட்டு இருக்கவில்லை.	பிரிவில் கடமை மேற்கொள்ளும் போது இடர்களிற்கு முகம் கொடுக்க நேரிட்ட காரணத்தால் 2024 உள்ளக கணக்காய்வு திட்டத்தின் இலக்கை நோக்கி செல்ல கடிமனாமதால் 2025 ஆண்டு முதல் உள்ளக கணக்காய்வை திட்டம்	குறித்த ஆண்டு திட்டமிட்டவாறு உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பிரகாரம் மேற்கொள்வதென.

7. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரந்துரைகள்
(அ)	தகவல் திணைக்களத்தன் பணிப்பாளர் நாயத்தின் கடமைப் பணிகளை முறையான கடமை ஒப்படைப்பு பட்டியல் மூலம் அல்லது சட்டமொன்று /வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிகாரமளிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட கோவை மற்றும் அதனுடன் தொடர்பான செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படுவது சுகாதார மற்றும் வெகுசன ஊடாக அமைச்சினால் ஆகையால் இது தொடர்பான முன்நடவடிக்கைகளை அமைச்சிடம் வினவ எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென.	முறையான கடமை ஒப்படைப்பு பட்டியல் மூலம் அல்லது சட்டமொன்று /வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிகாரமளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2022 ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் புதிய நியமனம் பெற்று திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள 63 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் அதற்கு மேலதிகமாக 24 தகவல் உத்தியோகத்தர் பதவிகளும், 11 ஊடக புலனாய்வு உதவியாளர்களும், 04 இணைய பதிவாளர் பதவிகளும் உள்ளடங்களாக 102 பதவிகள் திணைக்கள அங்கீகார பதவியணிக்கு உள்ளடக்கப்படாது நிறுவனத்தில் கடமையாற்றுவதாக அவதானிக்கப்பட்டது.	இணைக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இத் திணைக்களத்தின் அங்கீகார பதவியணியில் உட்படுத்திக் கொள்ளவது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவு ம், ஊடாக அபிவிருத்தி நிலையத்தால் இந்த திணைக்களத்திற்கு இணைக்கப்பட்ட பதவியணி தொடர்பான ஏனைய பதவிகளின் உத்தியோகத்தர் தொடர்பாக பரிந்துரை பெற்றுக் கொள்ள குழுவொன்று நியமிக்கப்படுள்ளதாகவு	திணைக்களத்திற்காக அங்கீகார பதவியணியை சரியாக தயாரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.

		ம் குழு பரிந்துரை கிடைத்த பின்னர் அரச சேவை ஆணைக்குழுவின் அறிவுரை பிரகாரம் முன் நடவக்கை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	
(இ)	திணைக்களத்தினுள் 5 ஆண்டுகளை விஞ்சி சேவையில் ஈடுபட்டுள்ள 68 பேர்களில் 13 பேர்கள் ஆண்டு 11 இற்கும் 15 இற்கும் இடையிலான ஆண்டு காலமாகவும், 30 பேர்கள் 15 ஆண்டுகளிற்கு அதிக காலமாகவும் திணைக்களத்தில் சேவையாற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.	ஆண்டு 2005 இல் ஆட்சேர்த்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பட்டதாரிகள் இத் திணைக்களத்தின் தகவல் உத்தியோகத்தர் பதவிக்கு உள்ளீர்புச் செய்ய விருப்பம் தெரிவித்ததன் மீது அந்த நடவடிக்கைகள் இடம்பெறுவதால் வழங்கியுள்ள அறிவுரை மீது அந்த உத்தியோகத்தர்களின் சேவை காலத்தின் மீது இடமாற்றத்திற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லைெயன.	ஆண்டு 5 இனை விஞ்சி சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிற்கு இடமாற்றம் வழங்க நடடிக்கை எடுக்க வேண்டும்.